# *DEPOSITION OF WITNESS*
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No.524/2024

## PW:2

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.அஜீத்குமார் | Taluk : | கும்பகோணம் |
| Father's Name : | திரு.கோபிநாத் | Calling : | LW3 |
| Village : | பெருமாண்டி | Age : | 27 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 06th day of November 2025.

Signature of Witness.

(Accused present. Additional Public Prosecutor Present. Defence counsel present)

**முதல் விசாரணை :**

நான் தற்போது கும்பகோணத்தில் வசித்து வருகிறேன். நான் ஏர்டெல் வைபை இணைப்பு அலுவலகத்தில் வேலை பார்த்து வருகிறேன். 26.07.2024 அன்று மாலை சுமார் 5.00 மணியளவில் டாக்டர் மூர்த்திரோட்டில் சிவகுருநாதன் தெருவில் நடந்தது. டீக்கடையில் டீ குடித்து கொண்டிருந்தேன். எக்சல் வாகனத்தில் இரண்டு பேர் வடக்கிலிருந்து வந்து கொண்டிருந்தார்கள். எதிர் திசையிலிருந்து லாரி வந்துக் கொண்டிருந்தது. லாரி மிக வேகமாக வந்தது. வெள்ளை கோட்டினை தாண்டி வந்து இருச்சக்கர வாகனத்தின் மீது லாரி மோதியது. அப்போது பின்னால் இருந்தவர் கீழே விழுந்து விட்டார். வாகனத்தை ஓட்டியவரையும் லாரி மோதிய வேகத்தில் இழுத்து சென்றது. நான் உடனே ஓடிச்சென்றேன். கீழே விழுந்து கிடந்த மகேஷை

தூக்கியபோது அவருக்கு தலையிலும் கையிலும் காயம் இருந்தது. கூட்டம் அதிகமாக கூடியது. சங்கரை போய் பார்த்தபோது அவருக்கு மூக்கிலும் காதிலும் இரத்தம் வந்துக் கொண்டிருந்தது. 108 ஆம்புலன்சிற்கு போன் செய்தேன். ஆம்புலன்சில் இருவரையும் ஏற்றி அனுப்பினார்கள். லாரி ஓட்டிய ஓட்டுநரை நான் பார்த்தேன். அவர் நீதிமன்றத்தில் உள்ளார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

விபத்து நடந்த டாக்டர் மூர்த்தி ரோடு என்பது மிக குறுகிய சாலை என்றால் சரிதான். இந்த விபத்து நடந்த இடத்திற்கு அருகாமையிலேயே வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். எந்தவொரு வாகனமும் கும்பகோணம் நால்ரோட்டிலிருந்து டாக்டர் மூர்த்தி ரோட்டிற்கு வரவேண்டும் என்றால் வேகத்தடையை தாண்டி தான் வரவேண்டும் என்றால் சரிதான். மேற்படிய விவரத்தை போலீசாரிடம் சொன்னேன். காயம்பட்டவரை தூக்கியபோது எனது சட்டையிலும் பேண்டிலும் இரத்தம் பட்டதா என்றால் என் சட்டையிலும் அவர் சட்டையிலும் இரத்தம் இருந்தது. விபத்து நடந்த அன்றே என்னை போலீசார் விசாரித்தார்கள். அதன்பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை. போலீசார் போன் செய்த பிறகு இரவு 8.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன். விபத்து நடந்த அன்றே லாரிக்கு முன்னால் இரண்டு கனரக வாகனங்கள் நின்றுக் கொண்டிருந்தது என்றால் சரியாக கவனிக்கவில்லை. நான் காயம்பட்ட நபருடன் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை. பொதுவாக ஒரு கனரக வாகனம் வேகத்தடையில் ஏறி வரும்போது திணறும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகாமையில் பிரிவு சாலைகள் உள்ளது

என்றால் சரிதான். இறந்து போனவரையும் அ.சா.1 மகேஷையும் எனக்கு தெரியாது. டீ குடித்துக் கொண்டிருந்தபோது டமார் என்ற சத்தம் கேட்டு தான் போய் பார்த்தேன் என்றால் சத்தம் கேட்கவில்லை. நான் சொன்ன நாள் நேரத்தில் விபத்து சம்பவமே நடைபெறவில்லை என்றாலும், போலீசார் சொல்லிக் கொடுத்து தற்போது பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரியின் பெயர் முகவரி போன்ற விவரங்கள் போலீசார் சொன்னதின்பேரில் தான் தெரியும் என்றால் சரிதான். எதிரியை எனக்கு தெரியாது என்றாலும், போலீசார் அடையாளம் காட்டியதின்பேரில் தான் நான் அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
Thanjavur at Kumbakonam.